முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

**Transfer Original Petition.8/2026**

*(CNR No.TNSV01004301-2025)*

* * * * *

1. ரெங்கசாமி
2. லெட்சுமி . . . மனுதாரர்கள்

/ எதிர் /

1. புசலான்
2. பாப்பாயி . . . எதிர்மனுதாரர்கள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 23.02.2026-ம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.வல்மீகநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த நிலையில் இன்று நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உ த் த ர வு:-</u>**

இம்மனுவானது திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கினை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 வழக்குடன் ஒன்றாக ஒரே நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து விசாரணை செய்யும் பொருட்டு, திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள

மு.வ.எண்.80/2020 வழக்கினை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 24-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

i) மனுவின் 2-ம் எதிர்மனுதாரர் பாப்பாயி என்பவருக்கு எதிராக மனுதாரரின் மனைவி லெட்சுமி என்பவர் மனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து எந்த தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாதென பரிகாரம் கோரி திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கும் O.S.No.80/2020 என நம்பராகி விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர்கள், மனுதாரர் மற்றும் அவரது மனைவி லெட்சுமிக்கு எதிராக மனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து விளம்புகை, அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் Null and void பரிகாரம் கோரி சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அவ்வழக்கும் O.S.No.260/2022 என நம்பராகி 05.01.2026 அன்று விசாரணைக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி இரண்டு வழக்குகளிலும் ஒரே சொத்து காண்பிக்கப்பட்டு, தனித்தனி நீதிமன்றங்களில் வழக்குகள் நடந்து வருகிறது.

ii) வழக்கு சொத்து குறித்து இரண்டு வேறு நீதிமன்றத்தில் தனித்தனியே வழக்கு நடத்தினால், இரண்டு மாறுபட்ட தீர்ப்பு ஏற்படும் நிலையில் உள்ளது என்றும், இதுவும் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் முரணாக ஆகிவிடக்

கூடும் என்பதால், இரு வழக்குகளையும் மாறுபட்ட தீர்ப்புகள் ஏற்படா வண்ணம் ஒரே நீதிமன்றத்தில் சேர்ந்தாற்போல நடத்த வேண்டியது அவசியமாக இருக்கிறது.

iii) எனவே திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள O.S.No.80/2020 என்ற வழக்கை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் O.S.No.260/2022 உடன் இணைத்து இரண்டு வழக்கையும் ஒரே வழக்காக சேர்த்து நடத்த ஏதுவாக திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள O.S.No.80/2020 என்ற வழக்கை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவினை அனுமதிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து முறையாக அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், அதனைப் பெற்றுக் கொண்ட எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

**4)** இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு சங்கதிகள், சம்பந்தப்பட்ட அசல் வழக்குகளின் வழக்குரை சங்கதிகளோடு ஒட்டுமொத்தமாக பரிசீலிக்கப்பட்டது. 2-ம் மனுதாரரால் திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கினையும், சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:20:36 +0530

மு.வ.எண்.260/2022 வழக்கினையும் ஒன்றாக ஒரே நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்து விசாரணை செய்யும் வகையில் திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கினை சிவகங்கை சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை மறுத்துரைக்கும் விதத்தில் எதிர்மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாகியுள்ளார்கள்.

**6)** மனுதாரர்கள் கோரியவாறு திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கிலும், சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 வழக்கிலும் இம்மனுவில் கண்ட மனு தரப்பினர்கள் வாதிகள், பிரதிவாதிகளாகவும் மற்றும் சொத்துக்களும் ஒன்றாக இருப்பதை மேற்கண்ட அசல் வழக்குகளில் தாக்கல் செய்யப்பட்ட பிராது நகல்களை பரிசீலித்ததிலிருந்து இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், மனுதாரர்கள் கோரியவற்றை மறுத்துரைக்கும் வகையில் எதிர்மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி அவர் தரப்பில் ஆட்சேபணை ஏதும் இருப்பதாக முன்னிடப்படவில்லை.

**7)** 2-வது மனுதாரர் திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020-ல் வாதியாகவும், 2-வது மனுதாரர் சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022-ல் பிரதிவாதியாகவும் உள்ளார். மேற்படி இரு வழக்குகளும் நிரந்தர உறுத்துக்கட்டளை, விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருவருக்கொருவர் எதிராக

கடந்த 2020 மற்றும் 2022-ம் வருடங்களில் ஒரே சொத்தைப் பொறுத்து தாக்கல் செய்துள்ளனர். எனினும், தாவாச் சொத்திற்கு வெவ்வேறு தொகை பெறுமான மதிப்பீடு செய்து அதன்பேரில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும், சார்பு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

**8)** இந்நிலையில், இவ்விரு வழக்குகளிலும் மனுவில் கண்ட மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்களாக இருப்பதாலும், அதேபோல் திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கிலும், சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022-லும் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, நெற்குப்பை குரூப், கீழநெற்குப்பை கிராமத்தில், கட்டளிப்புக்களத்தில் உள்ள சர்வே எண்.399/22 விஸ்தீரணம் சுமார் 7.5 செண்டு மேற்படி சொத்தில் ஆதி சர்வே எண்ணான 399/1-ல் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டது. பட்டா எண்.1679, வழக்குச் சொத்தாகவும் இருப்பதால், மேற்கண்ட இரு வழக்குகளும் ஒரே நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டால் மட்டுமே முரண்பட்ட தீர்ப்புகள் பகரப்படுவதை தவிர்க்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், அதிலும் குறிப்பாக மேற்படி மனுவில் கோரியவாறு திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கை சிவகங்கை, சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.260/2022 உடன் ஒருசேர நடத்துவதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட போவதில்லை என்பதை கருத்தில் கொண்டும், திருப்பத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கை மாறுதல் செய்து, சிவகங்கை,

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:20:56 +0530

10.03.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 உடன் ஒருசேர நடத்த உத்தரவிடுவதே மனு பொருண்மைகளின்படி சரியாக இருக்குமென இந்நீதிமன்றம் கருதுகிறது.

***முடிவில்,*** இம்மனு அனுமதிக்கப்பட்டு, திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.80/2020 வழக்கை, சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.260/2022 உடன் ஒருசேர விசாரித்து, ஒன்றுக்கொன்று முரண்படாமல் தீர்ப்புரை பகரப்பட ஏதுவாக சிவகங்கை, சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:21:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**<u>மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள்</u>**
**<u>தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-** இல்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.10 18:21:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
1. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பத்தூர்.
2. சார்பு நீதிபதி, சிவகங்கை.